# முதலமைச்சர் மாநில இளைஞர் விருது: மே 31–க்குள் விண்ணப்பிக்கலாம்

**சென்னை, மே 8:** சமுதாய வளர்ச்சிக்கு சேவையாற்றிய இளைஞர்கள், முதலமைச்சர் மாநில இளைஞர் விருதுக்கு மே 31–க்குள் விண்ணப்பிக்கலாம் என சென்னை மாவட்ட ஆட்சியர் சு.அமிர்ஜோதி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் திங்கள்கிழமை வெளியிட்ட செய்தி: சமுதாய வளர்ச்சிக்கு சேவையாற்றும் இளைஞர்களின் சேவையை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொரு வருடமும் சுதந்திரத்தினத்தன்று 15 முதல் 35 வயதுக்குள்பட்ட 3 ஆண்கள் 3 பெண்களுக்கு 'முதலமைச்சர் மாநில இளைஞர் விருது' வழங்கப்பட்டு வருகிறது.

இந்த விருதுடன் ரூ.1 லட்சம் ரொக்கமும், பாராட்டுப்பத்திரம் மற்றும் பதக்கம் உள்ளிட்டவையும் வழங்கப்படுகிறது. 2023–ஆம் ஆண்டுக்கான முதலமைச்சர் மாநில இளைஞர் விருது ஆக.15–ஆம் தேதி நடைபெறும் சுதந்திர தினவிழாவில் வழங்கப்படவுள்ளது.

இவ்விருதுக்கு தகுதியுடையவர்கள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரர்கள் 15 முதல் 35 வயது வரையுள்ளவர்களாகவும், 1.4. 2022 அன்று 15 வயது நிரம்பியவராகவும், 31.3.2023 அன்று 35 வயதுக்குள் இருப்பவராகவும் இருக்க வேண்டும்.

விண்ணப்பதாரர்களின் 1.4.2022 முதல் 31.3.2023 வரை மேற்கொள்ளப்பட்ட சேவைகள் மட்டுமே கருத்தில் கொள்ளப்படும்.

விருதுக்கு விண்ணப்பிக்கும் முன்பு குறைந்த பட்சம் 5 ஆண்டுகள் தமிழகத்தில் குடியிருந்தவராகவும் (சான்று இணைக்க வேண்டும்), சமுதாய நலனுக்காக தன்னார்வத்துடன் தொண்டாற்றியிருப்பவராகவும், அந்த தொண்டுகள் கண்டறியப்படுக்கூடியதாகவும், அளவிடக்கூடியதாகவும், உள்ளூர் மக்களிடம் உள்ள செல்வாக்கு மிக்கவராகவும் இருக்க வேண்டும். மத்திய, மாநில அரசுகள், பொதுத்துறை நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், பள்ளிகளில் பணியாற்றுபவர்கள் இவ்விருதுக்கு விண்ணப்பிக்க முடியாது.

விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை மே 31–ஆம் தேதி மாலை 4 மணிக்குள், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் www.sdat.tn.gov.in எனும் இணையதள முகவரி மூலம் சமர்ப்பிக்கலாம்.

கூடுதல் விவரங்களை தெரிந்து கொள்ள சென்னை செனாய்நகரில் உள்ள மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலகத்தை கைப்பேசி: 7401703480, தொலைபேசி: 044–26644794 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம் என தெரிவித்துள்ளார் அவர்.

# இந்திய விமானப் படை பாரம்பரிய மையம்: ராஜ்நாத் சிங் தொடங்கி வைத்தார்

**சண்டீகர், மே 8:** இந்திய விமானப் படையின் முதல் பாரம்பரிய மையத்தை சண்டீகரில் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் திங்கள்கிழமை தொடங்கி வைத்தார்.

சண்டீகர் யூனியன் பிரதேசத்துக்கும் விமானப்படைக்கும் இடையே கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் இந்த மையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மையம் 17,000 சதுர அடி பரப்பளவில் அமைந்துள்ளது. இது எதிர்காலத் தலைமுறைகளுக்கு ஆதர்சமாகத் திகழும் என்றும் இந்திய விமானப் படையின் சிறப்பை இது வெளிப்படுத்துவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

நாட்டிலேயே விமானப் படையின் முதல் பாரம்பரிய மையத்தை பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் திங்கள்கிழமை தொடங்கி வைத்துப் பேசியதாவது:

விமானப் படையில் பணியாற்றியவர்களின் வீரத்துக்கும் அர்ப்பணிப்பு உணர்வுக்கும் இந்த மையம் சான்றாகும். தேசத்தைக் காப்பதில் அவர்களின் பங்களிப்பை இந்த மையம் நினைவுபடுத்தும்.

இந்திய விமானப் படையின் செழுமையான பாரம்பரியத்தைப் பாதுகாக்க இந்த மையம் உதவும். இளைஞர்கள் ராணுவத்தில் சேர இது ஊக்கமளிக்கும் என்றார்.



சண்டீகரில் இந்திய விமானப் படையின் பாரம்பரிய மையத்தை திங்கள்கிழமை திறந்து வைத்து பழைமையான விமானத்தைப் பார்வையிட்ட பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங். உடன் இந்திய விமானப் படை தலைமைத் தளபதி வி.ஆர்.செளதரி.

இந்த விழாவில் பஞ்சாப் ஆளுநர் பன்வாரிலால் புரோஹித், விமானப் படைத் தளபதி வி.ஆர்.செளதரி, சண்டீகர் எம்.பி. கிரண் கெர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இங்கு போர் விமான மாதிரிகள், விமான என்ஜின்கள், கிரியாசேவ்-ஷிபுனோவ் இரட்டைக்குழல் துப்பாக்கிகள் உள்ளிட்ட ஆயுதங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. பழைமையான ஐந்து விமானங்களும் சாம்-3 பெச்சோரா ஏவுகணைகளும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. ஹிந்துஸ்தான் பிஸ்டன் டிரெய்னர்-32 வகையைச் சேர்ந்த பயிற்சி விமானமும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. அது கடந்த 1977 முதல் 2009 வரை இயங்கி வந்தது.

கடந்த 1958-இல் உருவாக்கப்பட்ட ஏர்ஃபோர்ஸ் கான்பூர்-1 ரக விமானமும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

விமானப் படையில் இணைந்து தேச சேவையில் பங்காற்றிய பெண் அதிகாரிகளுக்கும் தனி அரங்கு அமைக்கப்பட்டுள்ளது. நேத்ரா விமானம், பர்சாண்ட் ஹெலிகாப்டர், மி-26, மிக்-29 ரக விமானங்கள், உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட தேஜஸ் போர் விமானம், சி-130 ஹொர்குலிஸ், சுகோய்-30, எம்கேஐ, அதிநவீன துருவ் ஹெலிகாப்டர்கள் உள்ளிட்டவற்றின் மாதிரிகளும் இந்த மையத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

# ‘மிக்–21’ போர் விமானம் வீட்டின் மீது நொறுங்கி விழுந்து 3 பெண்கள் பலி

## மிக்–21 போர் விமானங்களை படையில் இருந்து விலக்க திட்டம்

இந்தியா விமானப் படையில் கடந்த 1960–ஆம் ஆண்டு முதல் பயன்பாட்டில் உள்ள மிக்–21 போர் விமானங்கள் 400–க்கும் மேற்பட்ட விபத்துகளில் சிக்கியுள்ளன.

தற்போது 3 விமானப் படைப் பிரிவுகளில் 50 மிக்–21 போர் விமானங்கள் பயன்பாட்டில் உள்ளன.

பாதுகாப்பு காரணங்களுக்காகவும், விமானப் படையை நவீனப்படுத்தும் நோக்கிலும் விமானப் படைப் பிரிவுகளில் இருந்து மிக்–21 போர் விமானங்களை அடுத்த 5 ஆண்டுகளுக்குள் விலக்கிக் கொள்ள பாதுகாப்புத் துறை திட்டமிட்டுள்ளது.



ராஜஸ்தானின் பார்மரில் கடந்த ஜூலை மாதத்தில் மிக்–21 பயிற்சி விமானம் விபத்துக்குள்ளானதில் 2 விமானப் படை வீரர்கள் உயிரிழந்தது நினைவுகூரத்தக்கது. மிக்–21 ரஷிய தயாரிப்பு போர் விமானமாகும்.

EVA

# என்பிஎஸ் கீழ் 50% வரை ஓய்வூதியம் பெற வாய்ப்பு

**புது தில்லி, மே 8:** தேசிய ஓய்வூதியத் திட்டத்தில் (என்பிஎஸ்) 20 முதல் 30 ஆண்டுகள் வரை தொடர்ந்து முதலீடுகளை மேற்கொண்டால், பணி ஓய்வுக்குப் பிறகுக் கடைசியாகப் பெற்ற ஊதியத்தில் 50 சதவீதம் வரை ஓய்வூதியம் பெற வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதிய நிதி ஒழுங்காற்று மேம்பாட்டு ஆணையத்தின் (பிஎஃப் ஆர்டிஏ) தலைவராக தீபக் மொஹந்தி பொறுப்பேற்றுள்ளார். இந்நிலையில், அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில், "முதிய வயதில் அனைவருக்கும் ஓய்வூதியம் கிடைக்கச் செய்வதற்கு முக்கியத்துவம் அளித்து பணியாற்றவுள்ளேன். அரசின் ஓய்வூதியத் திட்டங்கள் தொடர்பாக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முக்கியமாக, தேசிய ஓய்வூதியத் திட்டத்தின் பலன்களை அதிக எண்ணிக்கையிலான மக்களுக்குக் கொண்டு செல்ல முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

என்பிஎஸ் திட்டத்தின் கீழ் இதுவரை அரசுப் பணியாளர்கள் அல்லாத 10 லட்சம் பேர் இணைந்துள்ளனர். அதை நடப்பாண்டுக்குள் 13 லட்சமாக அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. பெண்களிடமும் அத்திட்டத்தின் பலன்களைக் கொண்டு சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஓய்வூதியத் திட்டங்களில் அதிக பலன் கிடைக்கும் வகையில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஓய்வூதியத்துக்கான முதலீடு என்பது நீண்டகாலத்துக்கானது. நீண்ட காலத்துக்கு முதலீடு செய்தால் மட்டுமே ஓய்வூதியப் பலன்கள் அதிகமாகக் கிடைக்கும். நீண்ட காலத்துக்கு முதலீடு செய்தால், சந்தையின் சவால்களைத் திறம்பட எதிர்கொள்ள முடியும்.

என்பிஎஸ் திட்டத்தின் கீழ் நல்ல ஓய்வூதியம் கிடைக்க வாய்ப்புள்ளது. சந்தையில் அத்திட்டம் சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது. 20 முதல் 30 ஆண்டுகள் வரையிலான தொடர் முதலீடு, சந்தை சூழல், ஊதியம் உள்ளிட்ட பல்வேறு காரணிகளின் அடிப்படையில், பணிஓய்வுக்குப் பிறகுக் கடைசியாகப் பெற்ற ஊதியத்தில் 50 சதவீதம் வரை ஓய்வூதியமாகப் பெற வாய்ப்புள்ளது" என்றார்.

# பாருக்கே ஒரு திலகம்

மக்களுக்குச் செய்யும் சேவையே மாதேவனாகிய இறைவனுக்குச் செய்யும் சேவை என்பதை நன்கு ணர்ந்த சுவாமி விவேகானந்தர் அந்நோக்கத்தை நிறைவேற்ற எண்ணம்கொண்டு ராமகிருஷ்ண மிஷனை நிறுவினார் ('பாரதத்தின் பெருமை; பாருக்கே அணிகலன்!' கட்டுரை, சுவாமி விமூர்த்தானந்தர், 3-5-2023). அமெரிக்காவின் சிகாகோ நகரத்திற்குச் சென்று, அங்கு நடைபெற்ற சர்வசமய மாநாட்டில் இந்தியாவின் கலாசார மேன்மையை உரக்க முழங்கினார். 125 ஆண்டுகளுக்கு முன்னர் விவேகானந்தரால் தோற்றுவிக்கப்பட்ட ராமகிருஷண மிஷன், புயல், வெள்ளம், ஆழிப்பேரலை, நிலநடுக்கம் போன்ற இயற்கைப் பேரிடர் காலங்களிலும் மக்களுக்கு உரிய நிவாரணம் வழங்கி தனது மக்கள் சேவையைத் தொடர்ந்துகொண்டிருக்கிறது. ராமகிருஷ்ண மிஷன் இந்தியாவுக்கு மட்டுமல்லாது, பாருக்கே ஒரு திலகம் போல் ஒளிர்கிறது.

**அ. சிவராம சேது**, திருமுதுகுன்றம்.

EVA STALIN IAS ACADEMY